IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

**C.C No.1527/2025**

Deposition of Witness **PW4**

| | | | |
|---|---|---|---|
| Name | : சந்திரசேகரன் | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **10.03.2026**

**சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.**

**எதிரி ஆஜர் .**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஈரோடு நகர குற்ற பிரிவு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த **03.11.2025**ம் தேதி காலை **8.30** மணியளவில் நிலைய அலுவலில் இருந்த போது வாதி சங்கமேஸ்வரன் என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று, ஈரோடு நகர குற்றப் பிரிவு காவல் நிலைய குற்ற எண்.**286/2025** சட்டப்பிரிவு **303(2) BNS**ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை அசலை கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.**2** அவர்களுக்கு அனுப்பி வைத்தும், மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் அசோக்குமார் அவர்களது பார்வைக்கு வைத்தேன். **புகார் அ.சா.ஆ6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை –இல்லை**

**மறுவிசாரணை இல்லை**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.10 18:35:07 +0530